# நமது தின கனி
காலை நாளிதழ்
NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 72 | 4 Pages | 14.10.2023 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 72 | 4 பக்கங்கள் | 14.10.2023 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## ரஷியா மீது உக்ரைன் நடத்திய டிரோன் தாக்குதலில் 3 பேர் பலி



மாஸ்கோ, அக். 14

ரஷியா–உக்ரைன் இடையேயான போர் 20 மாதங்களை கடந்தும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதிலும் சமீபகாலமாக இரு நாடுகளும் மாறிமாறி டிரோன் தாக்குதலை நடத்துகின்றன. அதன்படி ரஷியாவின் பெல்கோரோட் பிராந்தியத்தை குறிவைத்து உக்ரைன் டிரோன் தாக்குதல் நடத்தியது. இதனை ரஷிய ராணுவத்தினர் சுட்டு வீழ்த்தினர்.

எனினும் இந்த டிரோன் தாக்குதலில் பெல்கோரோட் பகுதியில் உள்ள ஒரு கட்டிடம் இடிந்து தரைமட்டமானது. கட்டிட இடிபாடுகளில் சிக்கி ஒரு குழந்தை உட்பட மூன்று பேர் பலியாகினர். இருவருக்கு படுகாயம் ஏற்பட்டது. காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் கட்டிட பகுதியில் மீட்பு பணி நடைபெற்று வருகிறது.

## இஸ்ரேலில் இருந்து 212 இந்தியர்கள் மீட்பு: விமானம் மூலம் டெல்லி வந்தடைந்தனர்



டெல்லி, அக். 14


இஸ்ரேல் ஹமாஸ் ஆயுதக்குழு இடையேயான போர் இன்று 7ம் நாளாக நடைபெற்று வருகிறது. இந்த போரால் இஸ்ரேலில் பல இந்தியர்கள் சிக்கிக்கொண்டனர். அவர்களை மீட்க மத்திய அரசு தீவிர முயற்சி எடுத்து வந்தது.

இந்நிலையில், இஸ்ரேலில் சிக்கித்தவிக்கும் இந்தியர்களை மீட்க ஆபரேஷன் அஜய் என்ற திட்டத்தை மத்திய அரசு தொடங்கியது. அதன்படி, டெல்லியில் இருந்து நேற்று இஸ்ரேலுக்கு முதல் மீட்பு விமானம் அனுப்பப்பட்டது.

அந்த விமானம் மூலம் முதல் கட்டமாக 212 இந்தியர்கள் மீட்கப்பட்டனர். இஸ்ரேலில் இருந்து 212 இந்தியர்களை ஏற்றிக்கொண்டு முதல் மீட்பு விமானம் இன்று காலை டெல்லி வந்தடைந்தது. டெல்லி விமானநிலையம் வந்தடைந்த இந்தியர்களை மத்திய மந்திரி ராஜீவ் சந்திரசேகர் நேரில் சென்று வரவேற்றார்.

போரால் இஸ்ரேலில் சிக்கியுள்ள எஞ்சிய இந்தியர்களை மீட்கும் நடவடிக்கையை மத்திய அரசு துரிதப்படுத்தியுள்ளது.

## மத்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கருக்கு பாதுகாப்பு அதிகரிப்பு



புதுடெல்லி, அக்.14

மத்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கருக்கு தற்போது 'ஒய்' பிரிவு பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது. அதன்கீழ், துப்பாக்கி ஏந்திய டெல்லி போலீஸ் குழு, பாதுகாப்பு அளித்து வருகிறது.

இந்நிலையில், அதைவிட உயர் பாதுகாப்பான 'இசட்' பிரிவு பாதுகாப்பு அளிக்க மத்திய உள்துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. ஜெய்சங்கரின் பாதுகாப்பு பொறுப்பை மத்திய ரிசர்வ் போலீஸ் படையிடம் (சி.ஆர்.பி.எப்.) ஒப்படைத்துள்ளது.

அதன்படி, நாட்டின் எந்த பகுதிக்கு ஜெய்சங்கர் சென்றாலும், துப்பாக்கி ஏந்திய 14 அல்லது 15 சி.ஆர்.பி.எப். கமாண்டோக்கள் 24 மணி நேரமும் 'ஷிப்ட்' அடிப்படையில் அவருக்கு பாதுகாப்பு அளிப்பார்கள் என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

# தி.மு.க. மகளிர் உரிமை மாநாடு: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நந்தனம் மைதானத்தில் ஆய்வு



சென்னை, அக். 14

தி.மு.க. மகளிர் உரிமை மாநாடு நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் இன்று மாலை நடைபெறுகிறது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில் அகில இந்திய காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா காந்தி அவரது மகள் பிரியங்காகாந்தி உள்பட இந்திய கூட்டணியில் உள்ள 9 பெண் தலைவர்கள் பங்கேற்கிறார்கள்.

இதற்காக நந்தனம் மைதானத்தில் பிரமாண்ட மேடை, பந்தல் அமைக்கப்பட்டு உள்ளது.

இந்த நிலையில் மாநாட்டிற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தேசிய அளவில் தலைவர்கள் வருவதால் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் அரங்கங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள வசதிகள், இருக்கைகள், மழை பெய்தாலும் பாதிப்பு ஏற்படாத வகையில் செய்யப்பட வேண்டிய ஏற்பாடுகள் தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விரிவாக கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின்போது கனிமொழி எம்.பி., அமைச்சர்கள் கே.என். நேரு, மா.சுப்பிரமணியன், தா. மோ.அன்பரசன் உள்ளிட்ட தி.மு.க. முக்கிய நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்கள் தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடமாடும் ஊர்தியில் உணவக தொழில் தொடங்கும் திட்டம்

திருப்பூர், அக். 14

ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்கள் தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடமாடும் ஊர்தியில் உணவகதொழில் தொடங்கும் திட்டம் உருவாக்கப்படவுள்ளது.

இதற்கான தகுதிகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும். வயது வரம்பு 18 வயது முதல் 55 வயது வரை, குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3,00,000 மிகாமல் இருக்க வேண்டும். சென்னை பகுதிகளில் உள்ளவராக இருக்க வேண்டும். இத்தொழிலுக்கு திட்டத் தொகையாக ரூ.3,55,000 வழங்கப்படும். இத்திட்டத் தொகையில் 30 விழுக்காடு மானியமும் மற்றும் பழங்குடியினர் தனி நபர்களுக்கு திட்டத்தொகையில் 50 விழுக்காடு மானியம் வழங்கப்படும். எஞ்சிய தொகை வங்கி கடன் தொகையாக பெற வழிவகை செய்யப்படும்.

இத்திட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சார்ந்த தொழில் முனைவோர் றறற. வயானஉழ.உழஅஎன்ற இணையதள முகவரியில் புகைப்படம் மற்றும் உரிய ஆவணங்களுடன் பதிவேற்றம் செய்யலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்கள்;.

மேலும் விபரங்களுக்கு மாவட்ட மேலாளர் அலுவலகம், தாட்கோ, அறை எண்:501 (ம) 503, 5 வது தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், பல்லடம் ரோடு, திருப்பூர்641 604. தொடர்புக்கு: அலைபேசி எண்: 94450 29552, தொலைபேசி எண்: 04212971112.

## தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வாணையம் நடத்திய Sub Inspector எழுத்து தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு உடற்தகுதி தேர்வுக்கு இலவசப் பயிற்சி வகுப்புகள்

திருப்பூர், அக். 14

தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வாணையத்தின் அறிக்கையில் ளுரடி ஐளெிநஉவழச பணிக்கான எழுத்து தேர்வு முடிவு விவரம் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், இப்பணியிடத்திற்கான உடற்தகுதி தேர்வு நவம்பர் 7 ஆம் தேதி முதல் நடைபெற உள்ளது. இத்தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ள அனைத்து இளைஞர்களும் ளுரடி ஐளெிநஉவழச பணிக்கான உடற்தகுதி தேர்வினை எதிர்கொள்ளும் பொருட்டு இம்மாணவர்களுக்கு உடற்தகுதி தேர்வுக்கான பயிற்சியினை அளிக்க திருப்பூர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் இந்த உடற்தகுதி தேர்விற்கு தயாராகும் இளைஞர்கள் இந்த இலவசப் பயிற்சியில் கலந்து கொள்ள தங்கள் பெயரை முன்பதிவு செய்ய திருப்பூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நேரிலோ அல்லது 04212999152, 9499055944 என்ற எண்ணிலோ தொடர்பு கொண்டு பயன்பெறுமாறு என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்கள்.



அமைச்சர் சாமிநாதன் திருப்பூர் மாவட்டம் உடுமலை வட்டம் தளி பேரூராட்சியில் நகர்ப்புற சாலை மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி மற்றும் மாநில நிதிக்குழு திட்டத்தின் கீழ் தார் சாலை அமைக்கும் பணியினை தொடங்கி வைத்தார்.

## மயக்கவியல் துறை மருத்துவ மாணவி தற்கொலைக்கான காரணங்கள்?

கன்னியாகுமரி

தூத்துக்குடி மாவட்டம் வி.டி.சி நகரைச் சேர்ந்தவர் சிவக்குமார். இவரது மகள் சுகிர்தா (27). இவர் குமரி மாவட்டம் குலசேகரம் பகுதியில் உள்ள ஸ்ரீ மூகாம்பிகா மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் மயக்கவியல் துறையில் முதுகலை பட்டம் படித்து வந்தார். இவர் கல்லூரி விடுதியில் தங்கி படித்து வந்தார். கடந்த 6ஆம் தேதி கல்லூரி செல்லாமல் இவர் விடுதியிலேயே தங்கிவிட்டதாக தெரிகிறது. கல்லூரி முடிந்து சக மாணவிகள் விடுதிக்கு சென்றனர். அப்போது சுகிர்தாவுடன் தங்கியிருந்த மாணவிகள் அவருடைய அறைக்கு சென்ற போது அந்த அறை உள்பக்கமாக பூட்டப்பட்டி ருந்தது. நீண்ட நேரமாக தட்டியும் கதவு திறக்கப்படவில்லை. இதனால் மாணவிகள் கல்லூரி நிர்வாகத்திற்கு தகவல் தெரிவித்தனர். இதையடுத்து கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்த போது மாணவி சுகிர்தா இறந்து கிடந்தார். உடன் போலீஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து சுகிர்தாவின் உடலை கைப்பற்றிய போலீஸார் அவரை ஆசாரிப்பள்ளத்தில் உள்ள கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதையடுத்து அந்த அறையை சோதனை செய்த போது அங்கு ஊசியும் மருந்து பாட்டிலும் இருந்தது. அந்த மருந்து குறித்து மருத்துவர்களிடம் கேட்டபோது அது தசைகளை தளர்வடையச் செய்யும் மருந்து என்றனர். மேலும் அறையை சோதனையிட்ட போது ஒரு கடிதம் சிக்கியது. அதில் டாக்டர் பரமசிவன் மயக்கவியல் துறை பேராசிரியர் தன்னை உடலளவிலும் மனதளவிலும் பாலியல் தொல்லை கொடுத்ததாகவும் டாக்டர் ஹரீஷ், டாக்டர் ப்ரீத்தி ஆகியோர் மனதளவில் துன்புறுத்தியதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த நிலையில் தனது மகளின் மரணத்தில் மர்மம் இருப்பதாக சுகிர்தாவின் தந்தை காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். இதையடுத்து தற்கொலைக்கு தூண்டியதாக இதுவரை 3 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. ஆனால் அவர்கள் கைது செய்யப்படவில்லை என அரசியல் கட்சியினர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இந்த நிலையில் குற்றம்சாட்டப்பட்ட பரமசிவன், ஹரீஷ், ப்ரீத்தி ஆகியோர் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர். மாவட்ட நிர்வாகத்திடம் கல்லூரி நிர்வாகம் அளித்த அறிக்கையில் பேராசிரியர் சஸ்பெண்ட் என தகவல் கிடைத்துள்ளது. மேலும் விடுதியில் வரும் புகார்களை விசாரிக்க குழு அமை க்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.



கலெக்டர் கிறிஸ்துராஜ் தலைமையில் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட தீ தடுப்பு மற்றும் தொழிற்சாலைகள் பாதுகாப்பு குழு கூட்டம் நடைபெற்றது.

# சப்இன்ஸ்பெக்டர் உடற்தகுதி தேர்வுக்கு இலவச பயிற்சி

திருப்பூர், அக். 14

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய உதவி ஆய்வாளர்களுக்கான எழுத்துத் தேர்வில் வெற்றிபெற்றவர்களுக்கு உடற்தகுதி தேர்வுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளன. இது குறித்து திருப்பூர் மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு விவரம் வருமாறு: தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வாணையத்தின் அறிக்கையில் உதவி ஆய்வாளர் பணிக்கான எழுத்துத் தேர்வு முடிவு வெளியிடப்பட்டுள்ளது. இந்த பணியிடத்துக்கான உடற்தகுதி தேர்வு நவம்பர் 7 ந் தேதி முதல் நடைபெற உள்ளது. எழுத்து தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ள அனைத்து இளைஞர்களும் உதவி ஆய்வாளர் பணிக்கான உடற்தகுதி தேர்வினை எதிர்கொள்ளும் வகையில் இலவச பயிற்சி வகுப்பு திருப்பூர் மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையத்தின் மூலம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே இந்த உடற்கல்வி தேர்வுக்கு தயாராகும் இளைஞர்கள் இலவச பயிற்சியில் கலந்து கொள்ள தங்கள் பெயரை முன்பதிவு செய்ய திருப்பூர் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் நேரிலோ அல்லது 0421 2999152, 9499055944 ஆகிய எண்களிலோ தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம்.

# திருப்பூர் காந்திநகர் ஏ.வி.பி., பள்ளியில் மன்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா




திருப்பூர், அக். 14

திருப்பூர் காந்திநகர் பகுதியில் அமைந்துள்ள ஏ.வி.பி. டிரஸ்ட் பப்ளிக் சீனியர் செகண்டரி பள்ளியில் 20232024 ம் கல்வி ஆண்டிற்கான மன்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா பள்ளியின் தாளாளர் கார்த்திகேயன் அருள் ஜோதி தலைமையில் பள்ளியின் கலையரங்கில் நடைபெற்றது.

பள்ளியில் செயல்பட்டு வரும் பல்வேறு மன்றங்களின் சார்பாக நடத்தப்பட்ட போட்டிகளிலும், மாநில மற்றும் மாவட்ட அளவில் நடைபெற்ற கராத்தே, டேக்வாண்டோ, சதுரங்கம், கேரம், நீச்சல், இறகுப்பந்து, கோ கோ மற்றும் சகோதயா கூட்டமைப்பு பள்ளிகளின் சார்பாக நடைபெற்ற பல்வேறு விளையாட்டுகளில் வெற்றி பெற்று சாதனை புரிந்த 450க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா நடைபெற்றது. இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட பள்ளியின் பொருளாளர் லதா கார்த்திகேயன் மற்றும் தாளாளர் கார்த்திகேயன் அருள் ஜோதி ஆகியோர் மாணவர்களுக்கு பரிசுகளையும், பாராட்டுச் சான்றிதழ்களையும், கேடயங்களையும் வழங்கினர்.

முன்னதாக இந்நிகழ்ச்சிக்கு வந்தவர்களை பள்ளியின் முதல்வர் பிரமோதினி வரவேற்றார். முடிவில் பள்ளியின் கலைநிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் நித்யா நன்றி கூறினார். நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் பள்ளியின் ஒருங்கிணைப்பாளர் மோகனா மற்றும் ஆசிரியர்கள் செய்திருந்தனர்.

# வணிகர்களின் நிலுவை தொகை ரத்து: முதல்வருக்கு மணலி சேக்காடு வணிகர் சங்கம் பாராட்டு

திருப்பூர், அக். 14

மணலி வணிகர் சங்க ஆலோசனை கூட்டம் சங்க அலுவலகத்தில் சங்க நிதி குழு தலைவர் சந்தனா என். சேகர் தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பு வடசென்னை வடக்கு மாவட்ட பொருளாளர் ராஜா சங்கர், நிதிக்குழு செயலாளர் சமுத்திர பாண்டியன், பொருளாளர் எஸ். எஸ். காட்வின், செயலாளர்கள் கருணாமூர்த்தி, ராஜேஷ், வேதா, துணை தலைவர் ராதாகிருஷ்ணன், முத்தையா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் சங்க பொது செயலாளர் மணலி என். மாரிமுத்து தலைமையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பின் தலைவர் ஏ. எம். விக்ரம ராஜாவின் கோரிக்கையை ஏற்று, முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் ரூபாய் 50 ஆயிரத்துக்குட்பட்ட நிலுவை வரிகளை அடியோடு ரத்து செய்தும் அதற்கு மேல் உள்ள நிலுவை வரியினை எந்த வித அபராதமும் இன்றி, 50 சதவீதம் கட்டினால் போதும் என்று ஆணை பிறப்பித்துள்ளதற்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் வணிகர் சங்க இளைஞரணி மாவட்ட செயலாளர் சோலை கணேஷ், கனிராஜன், வேல்முருகன், சூர்யா, சரவணன், தேவேந்திரன் மற்றும் மகளிர் அணி தலைவி சுபத்ரா, மணலி தலைவர் பால்ராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# சக்கரபாளையம் தாமோதர பெருமாள் கோவிலில் சிறப்பு அபிஷேகம்: இன்று நடக்கிறது



காங்கயம், அக். 14

முத்தூர் அருகே உள்ள சக்கரபாளையம் தாமோதர பெருமாள் கோவிலில் புரட்டாசி 4வது சனிக்கிழமை சிறப்பு அபிஷேகம் நாளை (சனிக்கிழமை) நடைபெறுகிறது. விழாவை முன்னிட்டு நாளை மாலை 5 மணிக்கு மங்கள இசையுடன் விழா தொடங்கப்பட்டு கணபதி ஹோம பூஜை நடைபெறுகிறது. தொடர்ந்து மாலை 6 மணிக்கு தாமோதர பெருமாள் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு பால், தயிர், இளநீர், பஞ்சாமிர்தம், திருமஞ்சனம் மூலம் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு, புதிய பட்டாடை உடுத்தப்பட்டு, சிறப்பு மலர் அலங்காரத்துடன், மகா தீபாராதனை பூஜை நடைபெறுகிறது.

விழா நிறைவாக பக்தர்களுக்கு பிரசாதங்கள், அன்னதானம் வழங்கப்படுகிறது. விழாவில் சுற்றுவட்டார கிராம பொதுமக்கள் பலர் கலந்து கொள்கின்றனர். விழாவிற்கான ஏற்பாடுகளை விழாக்குழுவினர், ஊர் பொதுமக்கள் ஆகியோர் செய்து வருகின்றனர்.

# செவித்திறன் குறைபாடு உள்ளவர்களுக்கு சிறப்பு முகாம்: காங்கயத்தில் இன்று நடக்கிறது

காங்கயம், அக். 14

காங்கயம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை சார்பில் நாளை ( சனிக்கிழமை) காலை 10 மணி முதல் 11 மணி வரை செவித்திறன் குறைபாடு உள்ளவர்களுக்கான இலவச ஆடியோகிராம் பரிசோதனை மருத்துவ முகாம் நடைபெற உள்ளது. முகாமிற்கு முன்பதிவு செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. முகாமிற்கு வருபவர்களுக்கு பரிசோதனைகள் செய்யப்பட்டு குறைபாடுகள் இருப்பின் அதற்கு உண்டான மருத்துவம் அளிக்கப்படும். ரூ.8ஆயிரம் முதல் ரூ. 10ஆயிரம் வரை மதிப்புள்ள செவிப்புலன் உதவி சாதனம் காப்பீடு திட்டத்தின் மூலம் வழங்கப்படும்.

குறைபாடு உள்ளவர்கள் முன்பதிவு செய்ய வேண்டும் மற்றும் முகாமிற்கு வருபவர்கள் தங்கள் புதிய குடும்ப அட்டை, ஆதார் அட்டை, முதலமைச்சர் காப்பீட்டு அட்டை, முதல்அமைச்சர் காப்பீட்டு அட்டை இல்லாதவர்கள் பழைய குடும்ப அட்டை இவைகளை கண்டிப்பாக எடுத்து வரவும் தெரிவித்தனர்.

# பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை

திருப்பூர், அக். 14

அரசு ஒதுக்கீட்டின்கீழ் பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவிகளுக்கு தமிழக அரசு சார்பில் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இது குறித்து திருப்பூர் மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு விவரம் வருமாறு: அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்கள், தனியார் தொழிற்கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டின்கீழ் பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவிகளுக்கு தமிழக அரசு சார்பில் பல்வேறு திட்டங்களின்கீழ் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 3 ம் ஆண்டு இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் மாணவ, மாணவிகளுக்கு இலவச கல்வித்திட்டத்தின்கீழ் எவ்வித நிபந்தனையுமின்றி கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. முதுகலை, பாலிடெக்னிக், தொழிற்படிப்பு போன்ற பிறபடிப்புகளுக்கு பெற்றோரின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.50 லட்சத்துக்கு மிகாமல் இருக்க வேண்டும். நிகழாண்டில் புதுப்பித்தல் மாணவர்கள் இணையதள முகவரியில் சென்று ஆதார் எண்ணை அளித்து இணைக்க செய்ய வேண்டும். இதில் ஏதாவது இடர்பாடு ஏற்படும் பட்சத்தில் தங்கள் கல்லூரியில் உள்ள கல்வி உதவித் தொகை உதவியாளரை ஆதார் எண் நகலுடன் அணுக வேண்டும்.

கல்வி உதவித்தொகை புதுப்பித்தலுக்கான இணையதளம் அக்டோபர் 18ந் தேதி முதல் செயல்படத் தொடங்கும். இது தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு தங்கள் கல்லூரியில் உள்ள கல்வி உதவித் தொகை உதவியாளரையோ அல்லது மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தை 0421 2999130 என்ற எண்ணிலோ அல்லது மின்னஞ்சல் முகவரியிலோ தொடர்பு கொண்டு விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# உடுமலை சிவாலயங்களில் பிரதோஷ பூஜை



உடுமலை, அக். 14

உடுமலை நகராட்சிக்கு உட்பட்ட தில்லை நகரில் ரத்தினலிங்கேஸ்வரர் கோவில் உள்ளது. இங்கு நேற்று பிரதோஷத்தையொட்டி மூலவர் நந்தி உள்ளிட்ட கடவுள்களுக்கு சிறப்பு பூஜை நடைபெற்றது. அப்போது சந்தனம், திருமஞ்சனம், பஞ்சாமிர்தம், பால், மஞ்சள், இளநீர், பழரசம், தேன், பன்னீர், கரும்புச்சர்க்கரை, சந்தனாதி தைலம் உள்ளிட்ட 16 வகையான திரவியங்கள் கொண்டு அபிஷேகம் நடத்தப்பட்டது. இதில் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சிவன் நந்தியை பற்றி பக்தி பாடல்களை பாடி சாமி தரிசனம் செய்தனர்.

இதே போன்று உடுமலை பகுதியில் உள்ள சிவாலயங்களில் பிரதோஷ விழாவையொட்டி நேற்று சிறப்பு பூஜை நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

# உடுமலை அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பட்டமளிப்பு விழா




உடுமலை, அக். 14

தமிழ்நாடு அரசு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் கீழ் செயல்பட்டு வரும் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் உடுமலை அருகே எலையமுத்தூர் சாலையில் செயல்பட்டு வருகிறது. இங்கு மின்சார பணியாளர், பொருத்துனர், கம்மியார் மோட்டார் வாகனம், கம்பியாள், பற்றவைப்பவர் உள்ளிட்ட பிரிவுகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. இந்த சூழலில் நடப்பாண்டில் புதிதாக இன்டஸ்ட்ரியல் ரோபோடிக்ஸ் டிஜிட்டல் மேனுபேக்ச்சரிங் டெக்னீசியன், மேனுபேக்ச்சரிங் பிராசஸ் கண்ட்ரோல் ஆட்டோமேஷன், அட்வான்ஸ் சி.என்.சி. மெஷின் டெக்னீசியன் படிப்புகள் அறிமுகம் செய்யப்பட்டது. அது மட்டுமின்றி அரசு உதவிகளுடன் பயிற்சியின் போதே தொழில் நிறுவனங்களில் உதவித்தொகையுடன் பயிற்சி, பயிற்சி முடித்தவுடன் மத்தியமாநில அரசு நிறுவனங்களில் வேலைவாய்ப்பு, மாதாந்திர உதவித்தொகையும் வழங்கப்படுவதால் ஏராளமான மாணவர்கள் ஆர்வத்தோடு சேர்ந்து படித்து வருகின்றனர். இந்த நிலையில் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இதில் நடப்பாண்டில் தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன. விழாவிற்கு உடுமலை அரசினர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் என். வி. நதிச்சந்திரன் தலைமை தாங்கினார். வால்பாறை அரசினர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் குணசேகரன் முன்னிலை வகித்தார். பயிற்சி அலுவலர் ரமேஷ் குமார் வரவேற்று பேசினார்.

இதில் சிறப்பு விருந்தினராக உடுமலை நகர மன்றத்தலைவர் மு. மத்தீன், வட்டாரப் போக்குவரத்து அதிகாரி நாகராஜ் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார்கள். இதில் அதிகாரிகள், பணியாளர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர். முடிவில் உதவி பயிற்சி அலுவலர் மாரிமுத்து நன்றி கூறினார்.

# உடுமலை ஜி.வி.ஜி. கல்லூரியில் தேசிய கருத்தரங்கம்




உடுமலை, அக். 14

உடுமலை ஸ்ரீஜி.வி.ஜி. விசாலாட்சி பெண்கள் கல்லூரியில் எட்ஜ் கம்பியூட்டிங் என்ற தலைப்பில் தேசிய கருத்தரங்கம் நடைபெற்றது.

கணிப்பொறியியல் செயற்கை நுண்ணறிவுத்துறையும், தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மன்றமும் இணைந்து நடத்திய இந்த நிகழ்ச்சிக்கு கல்லூரி செயலர் ஸ்ரீமதி சுமதி கிருஷ்ண பிரசாத் முன்னிலை வகித்தார். இந்த நிகழ்ச்சியில் துறைத் தலைவர் ஜெ.ராஜேஸ்வரி வரவேற்புரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் ராஜேஸ்வரி முதன்மை உரையாற்றினார். பொள்ளாச்சி கலை அறிவியல் கல்லூரி முதல்வர் கண்ணன் விழா தொடக்க உரையாற்றினார்.

இதையடுத்து உடுமலை அரசு கலைக்கல்லூரி கணிப்பொறி அறிவியல் துறை தலைவரும் இணை பேராசிரியருமான ஈ.கார்த்திகேயன், கோவை கே.ஜி. கலை அறிவியல் கல்லூரி கணிப்பொறி பயன்பாட்டு துறை இணை பேராசிரியர் கே. எஸ். மகராசன், கோவை ஸ்ரீராமகிருஷ்ணா பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி பேராசிரியர் எஸ்.ப்ரீத்தா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசினார்கள். நிறைவாக உதவி பேராசிரியர் கி.பவித்ரா நன்றியுரை வழங்கினார். இந்த நிகழ்வில் பல்வேறு கல்லூரியில் இருந்து 153 மாணவ மாணவியர் கலந்து கொண்டனர்.


# சென்னையில் 16ந்தேதி உண்ணாவிரத போராட்டம் கிரில் ஓர்க்ஷாப் உரிமையாளர்கள் சங்கம் ஆதரவு

திருப்பூர், அக். 14

தமிழகம் முழுவதும் உள்ள தொழில் சிறு குறு தொழில் நிறுவனங்கள் ஒன்றிணைந்து மின்துகர்வோர் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த கூட்டமைப்பு சார்பில் 430 சதவீதம் உயர்த்திய நிலைக் கட்டணம், பரபரப்பு நேர (பீக் ஹவர்) கட்டணத்தை திரும்பப் பெற வேண்டும். '3பி'யில் இருந்து '3ஏ1' நடைமுறைக்கு மாற்றி சிறு, குறு நிறுவனங்களை காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். சோலார் மேற்கூரை நெட்வொர்க் கட்டணத்தை ரத்து செய்ய வேண்டும். 2 ஆண்டுகளுக்கு மின் கட்டணத்தை உயர்த்தக் கூடாது என்பன உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, முதல்வரின் கவனத்தை ஈர்க்கும் வகையில், பல்வேறு கட்ட போராட்டங்களை முன்னெடுத்துள்ளது. இந்த நிலையில் திருப்பூர் மாவட்ட கிரில் ஓர்க்ஷாப் உரிமையாளர்கள் சங்கம் நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் திருப்பூர் மாவட்ட தலைவர் தாமஸ் தலைமையில் நடைபெற்றது.

இதில் மின்கட்டண உயர்வை திரும்ப பெற வலியுறுத்தி வரும் 16ம் தேதி சென்னையில் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட போவதாக தமிழ்நாடு தொழில்துறை மின்நுகர்வோர்கூட்டமைப்பினர் தெரிவித்திருக்கிறார்கள். அந்த உண்ணாவிரத போராட்டத்திற்கு ஆதரவளித்து அனைத்து கிரில் ஓர்க்ஷாப் உரிமையாளர்களும் கலந்து கொள்வது என முடிவெடுக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு 3பி கட்டணத்தை 3 ஏ முறைக்கு மாற்றி அமைத்திருப்பதாக அறிவித்திருந்தாலும் அது ஓர்க்ஷாப் தொழிலுக்கு பொருந்தாது. எனவே தமிழக அரசு அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

# 2 குடிசை வீடுகள் தீப்பிடித்து எரிந்து நாசம்



திருப்பூர், அக். 14

திருப்பூர் மாவட்டம், அவிநாசி மங்கலம் சாலையில், தாமரைக் குளம் பகுதியில் சசிகுமார் என்பவருக்கு சொந்தமான காலி இடம் உள்ளது. இங்கு தர்மபுரி மாவட்டம் எம். பள்ளிப்பட்டி பகுதியைச் சேர்ந்த குமார் என்பவர் தனது மனைவி சிவகாமியுடனும், அதே பகுதியை சேர்ந்த செல்வன் என்பவர் தனது மனைவி உமாவுடனும், தனித்தனியாக தற்காலிக குடிசை அமைத்து வசித்து வருகின்றனர். இவர்கள் அதே பகுதியில் கட்டிட வேலைக்கு சென்று வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று இரவு குமாரின் மனைவி சிவகாமி வீட்டில் சமைத்துக் கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக குடிசையில் தீ பற்றியது. இதில் மளமளவென தீ பரவியதால் அருகே இருந்த செல்வன் வீட்டிற்கும் தீ பரவியது. சிறிது நேரத்திலேயே இரு குடிசைகளும் முற்றிலும் தீயில் எரிந்ததால் வீட்டில் இருந்த பொருட்களும் எரிந்து நாசமானது.

தகவல் அறிந்த அவிநாசி தீயணைப்பு மற்றும் மீட்பு வீரர்கள் உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்து சுமார் ஒரு மணி நேரம் போராடி தீயை அணைத்தனர். அதிர்ஷ்டவசமாக வீட்டிலிருந்தவர்கள் வெளியேறியதால் உயிர் தப்பினர். அவிநாசி வட்டாட்சியர் மோகன் மற்றும் வருவாய் துறை அலுவலர்கள், தீ விபத்து பகுதியில் ஆய்வு செய்து இரு குடும்பத்தினரும் மாற்றிடத்தில் தங்குவதற்கு ஏற்பாடு செய்தனர்.

# போலீஸ்காரர் மனைவி தூக்குப்போட்டு தற்கொலை

சென்னை, அக். 14

சென்னை திருவல்லிக்கேணி ஜாம்பஜார் சட்டம் ஒழுங்கு போலீஸ் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியாற்றி வருபவர் முத்து. இவரது மனைவி புனிதா (வயது 32).

கடந்த 2016ம் ஆண்டு இருவரும் காதல் திருமணம் செய்து கொண்டனர். 3 வயதில் தரணிநேஷ் என்ற ஆண் குழந்தை உள்ளது.

திருவல்லிக்கேணி போலீஸ் குடியுருப்பில் வசித்து வந்தனர்.

நேற்று மாலையில் முத்து வீட்டில் டி.வி பார்த்துகொண்டிருந்தார். அப்போது புனிதா முத்துவை கோவிலுக்கு அழைத்துள்ளார். ஆனால் முத்துவோ நாளைக்கு கோவிலுக்கு செல்லலாம் என்று கூறிவிட்டு தொடர்ந்து டி.வி பார்த்துக்கொண்டே இருந்துள்ளார். இதனால் ஆத்திரம் அடைந்த புனிதா உங்களுக்கு நான் முக்கியமா? டி.வி முக்கியமா? என்று கேட்டுள்ளார். இதனால் இருவருக்கும் இடையே வாய் தகராறு ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து போலீஸ்காரர் முத்து ரிமோட்டை தூக்கி டிவி மீது அடித்துள்ளார். இதனால் மனமுடைந்த புனிதா படுக்கை அறைக்கு உள்ளே சென்று கதவை பூட்டிக்கொண்டு நீண்ட நேரமாக வெளியில் வராமலேயே இருந்துள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த முத்து நண்பர்கள் உதவியுடன் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தபோது மின்விசிறியில் புனிதா தூக்குப்போட்டு தற்கொலை செய்திருப்பது தெரியவந்தது. திருவல்லிக்கேணி போலீசார் அவரது உடலை கைப்பற்றி ஓமந்தூரார் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

# 'பாரத்' என பெயர் வைத்தால் எல்லாம் மாறிவிடுமா? சீமான் கேள்வி



சென்னை, அக். 14

சென்னையை அடுத்த போரூரில் உள்ள நாம் தமிழர் கட்சி தலைமை அலுவலகத்தில் மாயோன் திருவிழா மற்றும் மூக்கையா தேவரின் 44ம் ஆண்டு நினைவு நாளையொட்டி மலர் வணக்க நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கலந்து கொண்டு மாயோன் பெருவிழாவை கொண்டாடி விட்டு மூக்கையா தேவர் உருவப்படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

பின்னர் நிருபர்களிடம் சீமான் கூறியதாவது:

பாரத், சூரத் என எது வேண்டுமானாலும்பெயர் வைக்கலாம். உன்னுடைய நாட்டுக்கு நீ பெயர் வைக்கிறாய். அதில் நான் தலையிட விரும்பவில்லை. ஆனால் என் நாடு தமிழ்நாடு. 'பாரத்' என்ற பெயரை வைத்து விட்டால் எல்லாம் மாறி விடுமா?. ரூ.150 லட்சம் கோடி கடன் உள்ளது. அனைவருக்கும் கல்வி, பசி இல்லாத பாரதம், அனைவருக்கும் வேலைவாய்ப்பு என அனைத்தும் உருவாகிவிடுமா?. ஒரே நாடு என்றால் ஏன் காவிரி நீர் பெற்று தர முடியவில்லை. ராமேஸ்வரத்தில் தாமரை, சூரியன் நேரடியாக போட்டியிட்டால் எனது வேட்பாளரை திரும்ப பெறுவேன். அண்ணா பிறந்தநாளில் இஸ்லாமிய சிறை கைதிகளை விடுதலை செய்வதால் நெருக்கடியில் இருந்தால் தி.மு.க. போட்டியிடும் தொகுதிகளில் எனது வேட்பாளர்களை திரும்ப பெற்று ஆதரிக்கிறேன்.காவிரிநதிநீரை பங்கிட்டு தரவில்லை என்றால் நாடாளுமன்ற தேர்தலில் காங்கிரசை கூட்டணியில் இருந்து வெளியேற்றுங்கள். நான் முழுமையாக ஆதரிக்கிறேன்.

சனாதனத்தை பற்றி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதில் தவறில்லை. அவருக்கு மிரட்டல் விடுத்த அயோத்தி சாமியாரின் தலையை வெட்டினால் நான் ரூ.100 கோடி தருகிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

# கூவம் ஆற்றில் குதித்து 2 பேர் தற்கொலை: ஒருவரின் உடலை தீயணைப்பு படை வீரர்கள் மீட்டனர்



சென்னை, அக். 14

சென்னை, சிந்தாதிரிப்பேட்டை அம்மா நகர் போலீஸ் பூத் பின்புறம் உள்ள கூவம் ஆற்றில் நேற்று அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் பிணம் மிதப்பதாக சிந்தாதிரிப்பேட்டை போலீசாருக்கு தகவல் வந்தது. உடனடியாக சிந்தாதிரிப்பேட்டை போலீசார் மற்றும் எழும்பூர், திருவல்லிக்கேணி பகுதியில் இருந்து தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்தனர்.

தீயணைப்பு வீரர்கள் ரப்பர் படகு மூலம் கூவம் ஆற்றில் மிதந்த உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக ராஜீவ்காந்தி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுபற்றி சிந்தாதிரிப்பேட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையில் கூவம் ஆற்றில் பிணமாக கிடந்தவர் பெரும்பாக்கம் பகுதியை சேர்ந்த பழனி (54) என்பதும், இவர் பெயிண்டிங் வேலை பார்த்து வந்ததும் தெரியவந்தது. இவருக்கு அதிக அளவு குடிபழக்கம் இருப்பதும் தெரிய வந்தது. அவர் எதற்காக கூவம் ஆற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்டார்? என்பது குறித்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.

இதேபோல் பெரும்பாக்கம் பகுதியை சேர்ந்தவர் தேவராஜ் (55). இவர் மீன்பாடி வண்டி ஓட்டி வந்தார். நேற்று காலை இவர், பூங்கா ரெயில் நிலையத்தின் அருகில் உள்ள பாலத்தின் மீது ஏறி கூவம் ஆற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்டார்.

இதுபற்றி தகவல் அறிந்ததும்சிந்தாதிரிப்பேட்டை போலீசார் மற்றும் தீயணைப்புவீரர்கள்விரைந்து வந்து ரப்பர் படகு மூலம் தேவராஜ் உடலை தேடி வருகின்றனர். இந்த சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# ஈரோடு கிருஷ்ணம்பாளையம் பகுதியில் பாதாள சாக்கடை குழிக்குள் சிக்கிய லாரி



ஈரோடு, அக். 14

ஈரோடு கிருஷ்ணம்பாளையம் பகுதியில் பாதாள சாக்கடை திட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. இதன் காரணமாக ரோட்டின் குறுக்கே குழி தோண்டப்பட்டு குழாய் பதிக்கும் பணி நடந்தது. ரோட்டின் ஒரு புறம் குழாய் பதிக்கப்பட்டு குழி மூடப்பட்டது. மறுபுறம் குழி தோண்டப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் அந்த வழியாக தார்ரோடு போடுவதற்காக தார் மற்றும் ஜல்லி கலவையை ஏற்றிச் சென்ற லாரி ஒன்று, பாதாள சாக்கடை குழி தோண்டப்பட்டு முறையாக மூடப்படாமல் இருந்ததால் குழிக்குள்சிக்கியது. இதைத்தொடர்ந்து லாரியில் இருந்த தார், ஜல்லி கலவை டிராக்டருக்கு மாற்றப்பட்டு அங்கிருந்து எடுத்துச்செல்லப்பட்டது. பின்னர் மீட்பு வாகனம் மூலம் லாரி மீட்கப்பட்டது. இதன் காரணமாக கிருஷ்ணம்பாளையம் பகுதியில் நேற்று பல மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# மருதாநதி அணையில் நீர்வளத்துறை அதிகாரிகள் ஆய்வு



திண்டுக்கல், அக். 14

பட்டிவீரன்பட்டி அருகே அய்யம்பாளையத்தில் மருதாநதி அணை அமைந்துள்ளது. அணையின் மொத்த உயரம் 74 அடியாகும். தாண்டிக்குடி, பண்ணைகாடு, பாச்சலூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் மழை பெய்யும் போது அணைக்கு நீர்வரத்து ஏற்படும். இந்த நிலையில் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில வாரங்களாக பெய்த மழை காரணமாக அணையின் நீர் மட்டம்வேகமாகஉயர்ந்து அதன் முழு கொள்ளளவை எட்டியது.

அணைக்கு வினாடிக்கு 65 கனஅடி நீர்வரத்து உள்ளது. இந்த நிலையில் மதுரை மண்டல நீர்வளத்துறை தலைமை பொறியாளர் ரவி மற்றும் அதிகாரிகள் நேற்று மருதாநதி அணையை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். அணையில் உள்ள ஷட்டர்கள், தண்ணீர் செல்லும் வாய்க்கால்கள், அணையின் உறுதித்தன்மை, கிளை வாய்க்கால்களுக்கு தண்ணீர் திறந்து விடும் பகுதிகள் உள்ளிட்டவற்றை ஆய்வு செய்தனர்.

இதுகுறித்து நீர்வளத்துறையினரிடம் கேட்டபோது, மழைக்காலம் தொடங்கியுள்ளதால் அணையின் பாதுகாப்பு குறித்து ஆய்வு செய்ததாக தெரிவித்தனர். ஆய்வின் போது பெரியகுளம் மஞ்சளாறு வடிநில கோட்ட செயற்பொறியாளர் சுகுமார், மருதாநதி அணை வடிகால் உபகோட்ட செயற்பொறியாளர் செல்வம், பொறியாளர் கண்ணன் ஆகியோர் உடன் இருந்தனர்.

# பழனி பஸ் நிலைய நடைமேடையில் தடுப்பு கம்பிகள்



திண்டுக்கல், அக். 14

பழனி பஸ்நிலையத்துக்கு சுற்று வட்டார பகுதி மக்கள், பழனி முருகன் கோவிலுக்கு வரும் பக்தர்கள் என தினமும் ஆயிரக்கணக்கானோர் வருகின்றனர். வாரவிடுமுறை, விசேஷ நாட்களில் பஸ்நிலையத்தில் பயணிகள் கூட்டம் நிறைந்து காணப்படும். இந்நிலையில் பஸ்நிலைய நடைமேடையில் பயணிகளுக்கு இடையூறாக மோட்டார் சைக்கிள்களை சிலர் நிறுத்தி செல்கின்றனர். இதனால் நடைமேடையில் பயணிகள் நடந்து செல்லவே கடும் சிரமம் அடைந்தனர்.

இந்நிலையில் பழனி பஸ்நிலைய நடைமேடை ஆக்கிரமிப்பு குறித்து கடந்த மாதம் 24ந்தேதி 'தினந்தந்தி'யில் செய்தி வெளியானது.

அதையடுத்து பஸ்நிலைய நடைமேடையில் மோட்டார் சைக்கிள் நிறுத்துவதை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என நகராட்சி சார்பில் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் பஸ்நிலையத்தின் மேற்கு நுழைவு வாயில் வழியே மோட்டார் சைக்கிள்கள் செல்வதை தடுக்கும் விதமாக தடுப்பு கம்பிகள் அமைக்கப்பட்டுள்ளது. நகராட்சியின் இந்த நடவடிக்கையை பொதுமக்கள், பயணிகள் வரவேற்று உள்ளனர்.

அதேவேளையில் பஸ்நிலையத்தில் முழுமையாக ஆக்கிரமிப்பை அகற்றி சுகாதாரத்தை பேண வேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சென்னையில் 17ந்தேதி அ.தி.மு.க. 52வது ஆண்டு தொடக்க விழா: எடப்பாடி பழனிசாமி கொடியேற்றுகிறார்



சென்னை, அக். 14

சென்னையில் அ.தி.மு.க. 52வது ஆண்டு தொடக்கவிழா வருகிற 17ந்தேதி நடைபெற உள்ளது. இதையொட்டி அன்றைய தினம் கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, கட்சிக் கொடி ஏற்றுகிறார்.

அ.தி.மு.க. நிறுவனத்தலைவர் எம்.ஜி.ஆரால் தோற்றுவிக்கப்பட்ட அ.தி.மு.க. வருகிற 17ந்தேதி (செவ்வாய்க்கிழமை) 52வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

இதை கொண்டாடும் வகையில் அன்றைய தினம் காலை 10 மணியளவில் சென்னை ராயப்பேட்டை, அவ்வை சண்முகம் சாலையில் உள்ள தலைமைக்கழக புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். மாளிகை வளாகத்தில் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா உருவச்சிலைகளுக்கு, கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தி கட்சி கொடி ஏற்றி வைத்து இனிப்பு வழங்க உள்ளார்.

மேலும் கடந்த 20.8.2023 அன்று மதுரையில் நடந்த பொன்விழா எழுச்சி மாநாட்டுக்கு வருகை தந்தபோதும், மாநாடு முடிந்து ஊர்திரும்பும்போதும், எதிர்பாராத விதமாக மரணம் அடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு குடும்ப நல நிதியுதவியும், விபத்தில் காயம் அடைந்தவர்களுக்கு மருத்துவ சிகிச்சைக்கான நிதியுதவியும் கட்சியின் சார்பில் வழங்கப்படும்.

இதனை எடப்பாடி பழனிசாமி வழங்க இருக்கிறார்.

இந்த நிகழ்ச்சிகளில் கட்சியின் தலைமைக்கழக செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், எம்.பி., எம்.எல்.ஏ.க்கள், முன்னாள் அமைச்சர்கள், கட்சி சார்பு அமைப்புகளின் துணை நிர்வாகிகள் உள்பட கட்சியில் பல்வேறு வகையான அணி பிரிவை சேர்ந்த நிர்வாகிகளும், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தொண்டர்கள் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோல் 52வது ஆண்டு தொடக்க நாளையொட்டி, கட்சி அமைப்பு ரீதியாக செயல்பட்டு வரும் மாவட்டங்களுக்கு உட்பட்ட கிளை, வார்டு, வட்ட அளவில் ஆங்காங்கே கம்பீரமாக வீற்றிருக்கும் கட்சி கொடி கம்பங்களுக்கு புதுவர்ணம் பூசியும், கொடிக்கம்பங்கள் இல்லாத இடங்களில் புதிய கொடிக்கம்பங்களை அமைத்து கட்சிக் கொடியை ஏற்றி வைத்தும், எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா உருவப் படங்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்பு வழங்கியும், ஏழைஎளியோருக்கு அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகளைவழங்கியும் சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கட்சி அமைப்புகள் செயல்பட்டு கொண்டிருக்கும் பிற மாநிலங்களிலும் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்திகட்சியின்தொடக்க நாளை விழாக்கோலத்துடன் கொண்டாடுமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோவை பெண்ணை ஆபாசமாக பேசியதாக டிக்டாக் பிரபலங்களான ரவுடி பேபி சூர்யா, சிக்கந்தரை சைபர் கிரைம் போலீசார் கைது செய்தனர்



மதுரை, அக். 14

கோவையைச் சேர்ந்த யூடியூபர் சித்ரா. இவர் ஒரு தொண்டு நிறுவனம் நடத்தி வருவதாகவும், அதன் பெயரிலேயே யூடியூப் சேனல் நடத்தி வருவதாகவும் கூறப்படுகிறது.

இந்தநிலையில் மதுரை டிக்டாக் பிரபலங்களான ரவுடி பேபி சூர்யாசிக்கா என்ற சிக்கந்தர் ஆகியோர் குறித்து கோவை சித்ரா வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.

பதிலுக்கு சிக்கா என்கிற சிக்கந்தர் தினமும் அவரது யூடியூப் சேனல் மூலமாக சித்ராவை கேலி செய்து வீடியோ வெளியிட்டதாகவும், பணம் கேட்டு மிரட்டியதாகவும் கூறப்படுகிறது.

இதனால் மன உளைச்சலில் இருப்பதாகவும், தன்னை மிரட்டிய சிக்கந்தர் மற்றும் ரவுடி பேபி சூர்யா ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என சித்ரா கடந்த சில நாட்களுக்குமுன்புமதுரை போலீஸ் கமிஷனரிடம் புகார் கொடுத்தார். அந்த புகாரில் மேலும் அவர் கூறி இருப்பதாவது:

நான் குழந்தைகளுக்காக சேவை செய்து வருகிறேன். யூடியூப் மூலம் ரவுடி பேபி சூர்யா, சிக்கந்தர், சாதனா ஆகியோர் சமூகவலைத்தளங்களில் பதிவிடும் வீடியோ குழந்தைகளை மிகவும் பாதிக்கிறது.

அசிங்கமான வீடியோ, ஆபாசமாக பேசுவதால் குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள். இதை கண்டித்து கேட்டால் மிரட்டல் விடுகின்றனர். ஆபாசமாக வீடியோபதிவிடும்சேனல்களை முடக்க வேண்டும், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு புகாரில் தெரிவித்துள்ளார்.

இந்த புகாரின்பேரில் மதுரை சைபர் கிரைம் போலீசார், நேற்று காலை ரவுடி பேபி சூர்யா மற்றும் சிக்கந்தர் ஆகியோரை அழைத்து விசாரித்தனர்.

தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அவதூறாக பேசுவது, பெண்களை ஆபாசமாக சித்தரிப்பது உள்ளிட்ட 4 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து ரவுடி பேபி சூர்யா, சிக்கந்தர் ஆகியோரை கைது செய்தனர். இந்த நடவடிக்கை குறித்து சமூக வலைத்தளங்களிலும் பலரும் தங்களது கருத்துகளை பதிவிட்டனர்.

# கொள்ளிடம் ஆற்றில் 3 மணல் குவாரியில் டிரோன் கேமரா மூலம் அமலாக்கத்துறை அதிகாரிகள் ஆய்வு



தஞ்சாவூர், அக். 14

தமிழ்நாட்டில் ஆறுகளில் செயல்பட்டு வரும் மணல் குவாரிகளில் அரசு விதிமுறைகளின்படி மணல் அள்ளப்படுகிறதா? என்பது குறித்து மணல் குவாரிகளில் ஆய்வு செய்தனர். மேலும் மணல் குவாரிகளை ஒப்பந்தம் எடுத்த ஒப்பந்ததாரர்களின் வீடுகள் மற்றும் அலுவலகங்களில் கடந்த மாதம் 12ந்தேதி முதல் சோதனை நடத்தி வருகின்றனர்.

இந்த சோதனையின் ஒரு அங்கமாக நேற்று காலை தஞ்சை மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி அருகே உள்ள கோவிலடியில் கொள்ளிடம் ஆற்றில் செயல்பட்டு வந்த மணல் குவாரியில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர். துப்பாக்கி ஏந்திய மத்திய போலீசார் பாதுகாப்புடன் இந்த சோதனை நடந்தது.

தமிழ்நாடு நீர்வள ஆதாரத்துறை அதிகாரி ஒருவர் உடன் வர கோவிலடி மணல் குவாரி பகுதிக்கு வந்த அமலாக்கத்துறை அதிகாரிகள் மணல் குவாரி செயல்பட்ட இடங்கள் குறித்த அடையாளம் இடப்பட்ட பகுதிகளில் அரசு நிர்ணயித்த ஆழத்தில் மணல் அள்ளப்பட்டுள்ளதா? என்பதை டிரோன் கேமராவை பறக்கவிட்டு படம் எடுத்தனர்.

இதற்காக சக்தி வாய்ந்த டிரோன் கேமரா கொண்டுவரப்பட்டு இருந்தது. அந்த டிரோன் கேமராவை கையாளுவதற்கு உரிய தொழில்நுட்ப வல்லுனர்கள் உடன் வந்து இருந்தனர். சுமார் 3 மணி நேரத்திற்கு மேலாக இந்த ஆய்வு நடந்தது. ஆய்வை முடித்துக்கொண்டு அவர்கள், தாங்கள் வந்த கார்களில் ஏறி அங்கிருந்து சென்று விட்டனர்.

இதேபோல கொள்ளிடம் ஆற்றில் திருவையாறை அடுத்த மருவூரில் அமைந்துள்ள மணல்குவாரி, பட்டுக்குடியில் உள்ள மணல் குவாரியிலும் மணல் எடுக்கப்பட்ட இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் டிரோன் கேமரா மூலம் ஆய்வு செய்தனர்.

# கிருஷ்ணகிரியில் பெண் வீராங்கனைகளின் விழிப்புணர்வு பிரசார வாகன பேரணி



கிருஷ்ணகிரி, அக். 14

பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம், ஒரே பாரதம் உன்னத பாரதம் என்ற தலைப்பில் மத்திய ரிசர்வ் போலீஸ் படையின் பெண்வீராங்கனைகளின் மாபெரும்விழிப்புணர்வு பிரசார வாகன பேரணி தொடங்கி உள்ளது.


ஜம்மு மற்றும் காஷ்மீர் (ஸ்ரீநகர்), மேகாலாயா (சில்லாங்), தமிழ்நாடு கன்னியாகுமரி ஆகிய 3 இடங்களில் இருந்து தொடங்கி 75 மோட்டார் சைக்கிளில் எல்லை பாதுகாப்பு படை வீராங்கனைகள், 15 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்கள் என 10 ஆயிரம் கிலோ மீட்டர் கடந்து குஜராத் மாநிலம் ஏக்தா நகர் சென்றடைகின்றனர்.

கடந்த 5ந் தேதி கன்னியாகுமரியில் தொடங்கிய இந்த வாகன பேரணி கிருஷ்ணகிரி வந்தது. இந்த பேரணியை மாவட்ட கலெக்டர் சரயு, மத்திய ரிசர்வ் காவல் படையின் துணை தலைவர் இமான்ஸ்சுகுமார் ஆகியோர் வரவேற்று வாகன பெண் வீராங்கனைகளுக்கு நினைவு பரிசு வழங்கி சிறப்புரையாற்றினார்கள். இந்த நிகழ்ச்சியில் பள்ளி கல்லூரி மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் தாசில்தார் விஜயகுமார், கிருஷ்ணகிரி மாவட்ட முன்னாள் துணை ராணுவ படையின் மாவட்ட தலைவர் சுப்பிரமணி, துணை தலைவர் வெங்கடராமன், சி.ஆர்.பி.எப் கமாண்டோ குரூப் துணை ஆய்வாளர் வீரபத்திரன், கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியை கிருஷ்ணகிரி மாவட்ட சி.ஆர்.பி.எப். கமாண்டோ குரூப் மற்றும் முன்னாள் மத்திய ஆயுத காவல் படை வீரர்கள் நலச்சங்கம் மற்றும் காவேரிப்பட்டணம் இந்தியன் ரெட்கிராஸ் சொசைட்டி, தருமபுரி ஜவான்ஸ் குரூப் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 14.10.2023




# நானி படத்தின் டீசர் ரிலீஸ் எப்போது தெரியுமா?

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'லியோ'. இப்படத்தை செவன் ஸ்கிரீன் ஸ்டூடியோஸ் சார்பில் லலித் குமார் தயாரித்துள்ளார். அர்ஜுன், சஞ்சய் தத், திரிஷா, பிரியா ஆனந்த், மன்சூர் அலிகான், மிஷ்கின், கௌதம் வாசுதேவ் மேனன், சாண்டி, மேத்யூதாமஸ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்த படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். லியோ திரைப்படம் அக்டோபர் 19ம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

இந்நிலையில், இப்படத்தின் புதிய அறிவிப்பை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி, 'லியோ' திரைப்படம்ஐமேக்ஸில்வெளியாகவுள்ளது.இதனை படக்குழு போஸ்டரை பகிர்ந்து அறிவித்துள்ளனர். இந்த அறிவிப்பால் விஜய் ரசிகர்கள் உற்சாகமடைந்துள்ளனர்.

# லியோ முன்பதிவு துவங்கிடுச்சி.. புக் பண்ணிடலாமா?



லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'லியோ'. இப்படத்தை செவன் ஸ்கிரீன் ஸ்டூடியோஸ் சார்பில் லலித் குமார் தயாரித்துள்ளார். அர்ஜுன், சஞ்சய் தத், திரிஷா, பிரியா ஆனந்த், மன்சூர் அலிகான், மிஷ்கின், கௌதம் வாசுதேவ் மேனன், சாண்டி, மேத்யூ தாமஸ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்த படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். லியோ திரைப்படம் அக்டோபர் 19ம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

இந்நிலையில், இப்படத்தின் புதிய தகவல் வெளியாகியுள்ளது. அதாவது 'லியோ' திரைப்படத்தின் டிக்கெட் முன்பதிவு சென்னை, கோயம்பத்தூர், மதுரை போன்ற மாவட்டங்களில் தொடங்கியுள்ளதாக கூறப்படுகிறது. இப்படத்தின் மீதான எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் அதிகரித்து வரும் நிலையில் இந்த செய்தி ரசிகர்களை குஷிப்படுத்தியுள்ளது.

# அப்படினா சிவாஜி என் தாத்தா இல்லையா? கண்ணீர் விட்டு அழுத இறுகப்பற்று இயக்குனர்




இயக்குனர் யுவராஜ் தயாளன் இயக்கத்தில் நடிகர்கள் விக்ரம் பிரபு மற்றும் விதார்த் இணைந்து நடித்துள்ள திரைப்படம் 'இறுகப்பற்று'. இந்த படத்தில் ஸ்ரத்தா ஸ்ரீநாத், ஸ்ரீ, அபர்நதி, சானியா ஐயப்பன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். பொடன்ஷியல் ஸ்டூடியோஸ் தயாரித்துள்ள இந்த படத்துக்கு ஜஸ்டின் பிரபாகர் இசையமைத்துள்ளார். இப்படம் நேற்று (அக்டோபர் 6) திரையரங்குகளில் வெளியாகி நல்லவரவேற்பை பெற்றுவருகிறது. இதையடுத்து படத்திற்கும் மிகப்பெரிய வெற்றியை பரிசளித்த ரசிகர்களுக்கும் ஊடகங்களுக்கும் நன்றி தெரிவிக்கும் விதமாக நடைபெற்ற நன்றி தெரிவிக்கும் சந்திப்பில் படக்குழுவினர் கலந்துகொண்டனர்.

இதில், இயக்குனர் யுவராஜ் தயாளன் பேசியதாவது, படத்தில் ஷ்ரத்தாவின் கதாபாத்திரத்திற்கு அவரை கடைசி சாய்ஸ் ஆகத்தான் நினைத்து வைத்திருந்தேன். காரணம் இதே கதாபாத்திரத்தை கஷ்டப்பட்டு நடிக்கும் ஒரு நடிகையை தேடி கண்டுபிடிக்கமுயற்சித்தேன். ஆனால்சூப்பர்எனசொல்லும்அளவிற்குஸ்ராத்தாவிற்கு இந்த கதாபாத்திரம் அமைந்துவிட்டது படத்தின் மொத்த வசனங்களில் ஷ்ரத்தா ஸ்ரீநாத்திற்கு மட்டுமே 38 சதவீதம் வசனங்கள். படப்பிடிப்பில் அவர் அதை அழகாக பேசியதற்கும் அவருக்கு பொருத்தமாக டப்பிங் குரல் கொடுத்த ஸ்மிருதிக்கும் எனது நன்றி.

நடிகை அபர்ணதி இப்போது என்னை எவ்வளவு புகழ்ந்து பேசுகிறார். ஆனால் என்னை டார்ச்சர் பண்ணிய நடிகை என்றால் அது அவர் தான். அவர் காலில் மட்டும் தான் விழவில்லை. அந்த அளவுக்கு கெஞ்சினேன். நான் எந்த காட்சியை படமாக்குகிறேனோ அந்த மூடிலேயே இருக்க விரும்புவேன். ஆனால் அவர் சீரியஸான காட்சியில் நடித்துவிட்டு வந்து என்னிடம் ஜாலியாக பேசி மூடை மாற்ற முயற்சி செய்வார். ஆனால் சானியா ஐயப்பனை பொறுத்தவரை என்ன காட்சி எடுக்கிறோமோ அதே மூடில் இருப்பார் அவர் அழும்போது நானும் அழுவேன்.


விதார்த்தம் நானும் 13 வருடங்களுக்கு முன்பே ஒரு படத்தில் இணைந்து பணியாற்றினோம். பத்து நாட்கள் படப்பிடிப்பு நடந்த நிலையில் தான் வடிவேலுவின் படம் எனக்கு வந்தபோது வேறு வழியின்றி அந்தப்படத்தை கைவிட நேர்ந்தது. விதார்த்தும் அதை பெரிய மனதுடன் ஒப்புக்கொண்டு என்னை அனுப்பி வைத்தார். அந்த பெருந்தன்மைக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக இந்த படத்தை அவருக்கு கொடுத்திருக்கிறேன்.

ஸ்ரீ என்னிடம் உதவி இயக்குனராக வேலை பார்க்கத்தான் வந்தார். அதன்பிறகே இதில் நடிக்க ஒப்புக் கொண்டார். இப்படத்தில் நடிக்கும் போதே நான் எவ்வளவு கெட்டவனாக இருந்திருக்கிறேன் என பெர்சனல் ஆகவே ஃபீல் பண்ணி பேசுவார். இப்படம் பார்த்துவிட்டு அவரை வைத்து ரொமான்ஸ், லவ் படம் எடுக்கலாம் என யாரும் நினைக்காதீர்கள். லவ் சீனை பொறுத்தவரை அவருக்கு நடிக்கவே தெரியாது. யாராவது அவரை வைத்து லவ் படம் எடுக்கதா இருந்தால் என்னிடம் கேட்டு விட்டு படம் பண்ணுங்கள். அந்த அளவிற்கு என்னை வேலை வாங்கி இருக்கிறார் .

விக்ரம் பிரபு நடித்த கதாபாத்திரத்தில் நடிப்பதற்கு நிறைய பேர் தயங்கினார்கள். காரணம் இது மல்டி ஸ்டார் படமாக இருந்தது. அது மட்டுமல்ல ஹீரோயினை மையப்படுத்திய படமாகவும் இருப்பதாக அவர்கள் நினைத்தார்கள். ஆனால் விக்ரம் பிரபு இந்த படத்தில் நடிக்க வேண்டியது என்னுடைய பொறுப்பு என்று கூறி ஒப்புக்கொண்டார். அவரும் ஷ்ரத்தாவும் நடிக்க வேண்டிய ஏழு நிமிட காட்சியை ஒரே ஷாட்டில் படமாக்கினோம்.

அவருக்கும் எனக்கும் சிறுவயதில் இருந்தே ஒரு தொடர்பு இருக்கிறது. என்னுடைய தந்தை தீவிரமான சிவாஜி ரசிகர். சிறுவயதில் சிவாஜியின் படத்தைக் காட்டி இவர்தான் உன்னுடைய தாத்தா என்று சொல்வார். நானும் அவரையே என்னுடைய தாத்தா என்று எல்லோரிடமும் கூறுவேன். பள்ளி தலைமை ஆசிரியரே என் தந்தையை அழைத்து விசாரிக்கும் அளவிற்கு சிவாஜி தான் என் தாத்தா என நம்பினேன். அதன்பிறகு அவர் என் தாத்தா இல்லை என சொன்னதும் அழுதுவிட்டேன். சிவாஜியை பார்த்து வளர்ந்த குடும்பம் எங்களுடையது. சிவாஜி இறந்த அன்று இரவு என் தந்தை ரொம்பவே அழுதார். தயாரிப்பாளர்எஸ். ஆர்பிரபுவின்ஒத்துழைப்பால்இப்படத்தைமுழுவதுமாக நான் நினைத்தபடி எடுக்க முடிந்தது. நான் டென்ஷனாக இருந்தாலும் கூட அவர் ரொம்பவே கூலாக விஷயங்களை டீல் செய்தார். நான் சில பேர் காலில் விழுந்து வணங்க வேண்டும் என்று நினைப்பவர்களில் தயாரிப்பாளர் எஸ்.ஆர்.பிரகாஷ் பாபு சாரும் ஒருவர். இன்று நடப்பதை எல்லாம் பார்க்கும்போது நாளை தான் என் படம் ரிலீஸ் ஆகிறது என்பது போல உணர்கிறேன்" என்று கூறினார்.

# மீண்டும்.. மீண்டுமா? லியோ குறித்து அரசு வெளியிட்ட புதிய உத்தரவு



Most Immediate

Home (Cinema) Department, Secretariat, Chennai600 009.

Letter e-file No.885/Cinema/2023-4, Dated 13.10.2023

From
Tmt.P.Amudha, IAS., Principal Secretary to Government.

To
The Additional Chief Secretary/ Commissioner of Revenue Administration, Chennai – 600 005. (w.e.)
The Commissioner of Police, Greater Chennai Police, Chennai – 600 007. (w.e.)
All District Collectors (Except Chennai) (w.e.)

Sir/Madam,

Sub: Cinemas – Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957 – Permission to conduct a special show to screen the film titled "LEO" on 19.10.2023, 20.10.2023, 21.10.2023, 22.10.2023, 23.10.2023 and 24.10.2023 in the permitted theatres all over Tamil Nadu – Orders – Issued – Instructions issued.

Ref: 1. Letter (Ms) No.331, Home (Cinema) Department, dated 01.04.2016.
2. G.O.(Rt.) No.845, Home (Cinema) Department, dated 10.10.2023
3. G.O.(D.) No.32, Home (Cinema) Department, dated 11.12023.

*****

I am directed to enclose a copy of the Government order third cited, wherein permission was accorded to conduct a Special show for the film titled "LEO" on 19.10.2023, 20.10.2023, 21.10.2023, 22.10.2023, 23.10.2023 and 24.10.2023 (i.e. maximum five shows per day), in relaxation of condition 14-A of Form 'C' licence, subject to the condition that the licensees should intimate the Licensing Authorities and other Tax levying Authorities concerned having jurisdiction over the place of exhibition in advance.

2. In the Government order second cited, among others, orders were issued permitting the permanent and semi-permanent cinema theatres in Tamil Nadu to conduct an extra show on 11.1.2023,

- 2 -

12.1.2023, 13.1.2023 and 18.1.2023 at 9.00 AM in connection with the "Pongal Festival Week".

3. Accordingly, I am directed to request all the Licensing Authorities to issue necessary instructions to the Cinema theatres ["C Form" Licensees] in Tamil Nadu under your jurisdiction, to allow screening of one special show for the Tamil film titled "LEO" on 19.10.2023, 20.10.2023, 21.10.2023, 22.10.2023, 23.10.2023 and 24.10.2023 (i.e maximum 5 shows per day). All Theatres can screen only one special show, opening show will start at 9:00am and last show will end at 1.30am.

4. I am also to direct that all the licensing authorities to follow the directions given in the Government letter first cited, wherein directions have been given to the Licensing Authorities under the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 and Rules, 1957, to constitute a Special team in their jurisdiction to monitor the violations of provisions relating to the rates of admission in cinema theatres in the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957 and the Tamil Nadu Entertainments Tax Act, 1939.

5. I am therefore to direct all the Licensing Authorities to follow the above instructions scrupulously, during the screening of Special show for the film titled "LEO" on 19.10.2023, 20.10.2023, 21.10.2023, 22.10.2023, 23.10.2023 and 24.10.2023 and to take necessary action to ensure proper safety and security of public and audience visiting cinema halls, regulating proper traffic and parking arrangements and to prevent charging at exorbitant rates of admission during such shows of Tamil film titled "LEO", in accordance with the condition 14-A, of Form "C" licence under the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957 and also to take action against any violations if found in this regard and to send an action taken report to Government, immediately.

Yours faithfully,

For Principal Secretary to Government

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிப்பில் உருவாகியுள்ள திரைப் படம் 'லியோ'. இப்படத்தை செவன் ஸ்கிரீன் ஸ்டூடியோஸ் சார்பில் லலித் குமார் தயாரித்துள்ளார். அர்ஜுன், சஞ்சய் தத், திரிஷா, பிரியா ஆனந்த், மன்சூர்அலிகான், மிஷ்கின், கௌதம் வாசுதேவ் மேனன், சாண்டி, மேத்யூ தாமஸ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்த படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். லியோ திரைப்படம் அக்டோபர் 19ம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இதையடுத்து 19ஆம் தேதி முதல் 24ஆம் தேதி வரை ஒரு நாளைக்கு 5 காட்சிகள் திரையிடலாம் என திரையரங்குகளுக்கு அரசு உத்தரவு பிறப்பித்திருந்தது. இந்நிலையில், சிறப்பு காட்சி காலை 9 மணிக்கும் கடைசி காட்சி நள்ளிரவு 1.30 மணிக்கு முடித்துக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும் , சிறப்பு காட்சி திரையிடுவதில் விதிமீறல் நடைபெறாமல் இருப்பதைக் கண்காணிக்க சிறப்பு குழு அமைக்க மாவட்ட ஆட்சியர்களுக்கு முதன்மை செயலாளர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

# விஷாலுக்கு சிறப்பு பரிசளித்த யோகிபாபு



சாமி, அருள், ஆறு, சிங்கம் உள்ளிட்ட படங்களை இயக்கிய இயக்குனர் ஹரி தற்போது புதிய படம் ஒன்றில் நடிக்கிறார். இப்படத்தில் விஷால் கதாநாயகனாக நடிக்கிறார். இவருக்கு ஜோடியாக பிரியா பவானி சங்கர் நடிக்கிறார். விஷால் 34 என தற்காலிகமாக பெயர் வைத்துள்ள இப்படத்தை ஜீ ஸ்டுடியோஸ் சவுத் மற்றும் இயக்குனர் கார்த்திக் சுப்பராஜின் ஸ்டோன்பெஞ்ச் ஃபிலிம்ஸ் இணைந்து தயாரிக்கின்றனர். இப்படத்தின் படப்பிடி ப்பு தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் பகுதிகளில் நடைபெற்று வருகிறது. குமாரசக்கணபுரம், வீர காஞ்சிபுரம், ஊசிமேசி யாபுரம் உள்ளிட்ட சுற்று வட்டார பல கிராமங்களில் கடந்த 20 நாட்களுக்கு மேலாக படப்பிடிப்பு நடை பெற்று வருகிறது. இந்நிலையில், நடிகர் விஷாலுக்கு யோகிபாபு பரிசு ஒன்றை வழங்கியுள்ளார். அதாவது, காரைக்குடி படப்பிடிப்பின் போது நடிகர் யோகிபாபு, முருகர் சிலை ஒன்றை வாங்கி விஷாலுக்கு பரிசளித்துள்ளார். இதனை விஷால் தனது சமூக வலைதளத்தில் புகைப்படத்தை பகிர்ந்து தெரிவித்துள்ளார்.

# '46 ஆண்டுகளுக்கு பிறகு வந்துள்ளேன்'.. பழைய நினைவுகளை பகிர்ந்த ரஜினிகாந்த்



ஜெயிலர் படத்தின் வெற்றியை தொடர்ந்து ரஜினிகாந்த் நடித்து வரும் புதிய படத்தின் படப்பிடிப்பு நெல்லை மாவட்டம் பணகுடியில் கடந்த 10ந்தேதி தொடங்கியது.

இதற்காக திருவனந்தபுரத்தில் இருந்து கன்னியாகுமரி வந்த நடிகர் ரஜினிகாந்த், அங்குள்ள ஒரு ஓட்டலில் தங்கி உள்ளார். கடந்த 3 நாட்களாக படப்படிப்புக்காக காரில் பணகுடிக்கு வரும் நடிகர் ரஜினியை காண அவரது ரசிகர்கள் அங்கு குவிந்த வண்ணம் உள்ளனர். அவர்களிடையே கை அசைத்தபடியும், கை குலுக்கியபடியும் நடிகர் ரஜினி படப்பிடிப்பில் கலந்து கொண்டு வருகிறார்.

இந்நிலையில் இன்று 4வது நாள் படப்படிப்பு நடக்கிறது. 3 நாட்கள் மட்டுமே அங்குள்ள தள ஓடு தொழிற்சாலையில் சண்டை காட்சிகள் படமாக்கப்படும் என்று தெரிவித்திருந்த நிலையில், கூடுதல் காட்சிகளுக்காக இன்று மேலும் ஒருநாள் படப்பிடிப்பு நீட்டிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே படப்பிடிப்பில் பங்கேற்க வந்த நடிகர் ரஜினிக்கு அவரது ரசிகர்கள் வரவேற்பு அளித்தனர். அப்போது அவர் ரசிகர்கள் மத்தியில் பேசிய வீடியோ சமூக வலை தளங்களில் வைரலாகி வருகிறது. அதில் ரஜினிகாந்த், "46 ஆண்டுகளுக்கு பிறகு நெல்லைக்கு வருகை தந்துள்ளேன். கடைசியாக 1977ம் ஆண்டு புவனா ஒரு கேள்விக்குறி என்ற படத்துக்கு வந்தது" என அவர் தனது நினைவுகளை பகிர்ந்துள்ளார். இந்த படத்தில் நடிகர் அமிதாப்பச்சன், பகத் பாசில், துஷாரா விஜயன், ரித்திகா சிங், ராணா, மஞ்சு வாரியர் ஆகியோர் நடிக்கின்றனர். ஞானவேல் இயக்கும் இப்படத்தைலைகாநிறுவனம்தயாரிக்கிறது.அனிருத்இந்தபடத்திற்குஇசையமைக்கிறார்.

# எப்படிங்க.. சரியாதானே பந்து வீசினார்? திடீரென நோ பால் கொடுத்த அம்பயர்.. எதற்கு தெரியுமா?




வங்கதேச அணிக்கு எதிரான போட்டியில் நியூசிலாந்து வீரர் கிளென் பிலிப்ஸ் பந்து வீசிய பின் அம்பயர் நோ பால் என அறிவித்தார்.

அப்போது ரசிகர்களும், சில நியூசிலாந்து வீரர்களும் கூட பிலிப்ஸ் சரியாகத் தானே பந்து வீசினார். பின் எதற்காக அம்பயர் நோ பால் கொடுத்தார் என குழம்பினர். ஆனால், கிளென் பிலிப்ஸ் பந்து வீசும் போது ஒரு தவறு செய்தார்.

முதலில் இந்தப் போட்டியில் பகுதி நேர ஸ்பின்னர் ஆன கிளென் பிலிப்ஸ் 2 ஓவர்களை வீசினார். தான் வீசிய முதல் ஓவரிலேயே முதல் பந்தில் விக்கெட் வீழ்த்தினார். அதைத் தொடர்ந்து அவருக்கு மீண்டும் ஒரு ஓவர் வீச வாய்ப்பு கொடுத்தார் நியூசிலாந்து அணியின் கேப்டன் கேன் வில்லியம்சன்.

கிளென் பிலிப்ஸ் 15வது ஓவரின் முதல் பந்தை வங்கதேச அணியின் கேப்டன் ஷகிப் அல் ஹசனுக்கு வீசினார். அவரது கால் சரியாக கிரீஸில் இருந்தது. அதை விட்டு முன்னே கால் செல்லவில்லை. ஆனால், பந்தை வீசும் போது எதிர் முனை ஸ்டம்ப்பில் பிலிப்ஸின் இடது கால் பட்டு, பெயில்ஸ் கீழே விழுந்தது.

கிரிக்கெட் விதிப்படி இது நோபால் என்பதால் அம்பயர் அதை அறிவித்தார். அடுத்த பந்துக்கு ஃப்ரீஹிட்டும் கொடுத்தார். விதிப்படி, பந்து வீச்சாளர் பந்தை வீசத் தொடங்கிய பின், பந்தை வீசும் முன், அந்த பந்துவீச்சாளர் ஏதோ ஒரு வகையில் எதிர்முனை ஸ்டம்ப்பை தகர்த்தால், எதிர் முனை பேட்ஸ்மேன் கிரீஸை விட்டு செல்லாத பட்சத்தில் அது நோ பால் ஆகும். இந்த விதிப்படி தான் இதை அம்பயர் நோ பால் என அறிவித்தார்.

கிளென் பிலிப்ஸ் பகுதி நேர பந்துவீச்சாளர் என்றாலும், இந்த உலகக்கோப்பை தொடரில் நியூசிலாந்து அணிக்கு நம்பகமான பந்துவீச்சாளராக மாறி இருக்கிறார். இங்கிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் 3 ஓவர்கள் வீசி 17 ரன்கள் கொடுத்து 2 விக்கெட்கள் சாய்த்தார். அடுத்து நெதர்லாந்து போட்டியில் 2 ஓவர் வீசி 11 ரன்கள் மட்டும் கொடுத்தார். தற்போது வங்கதேசத்திற்கு எதிரான போட்டியில் அவர் 1 விக்கெட் வீழ்த்தி அசத்தி இருக்கிறார்.

# உலகக்கோப்பைக்கு மவுசு போச்சு.. ஒலிம்பிக்கில் கிரிக்கெட் சேர்ப்பு.. தங்கம் வெல்வது தான் இனி லட்சியம்

2028 ஒலிம்பிக்கில் கிரிக்கெட் விளையாட்டை சேர்க்க முதற்கட்ட ஒப்புதலை அளித்துள்ளது சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி. வரும் திங்கள் அன்று புதிய விளையாட்டுக்களை சேர்க்க உறுப்பினர்கள் இடையே ஓட்டுப் பதிவு நடைபெறும். அதன் முடிவில் முக்கிய விளையாட்டான கிரிக்கெட் நிச்சயம் தேர்வாகும் என் கூறப்படுகிறது.

ஒலிம்பிக்கில் கிரிக்கெட் சேர்க்கப்பட்டால் இனி டி20 உலகக்கோப்பை மற்றும் ஒருநாள் போட்டி உலகக்கோப்பை வெற்றியை விட ஒலிம்பிக்கில் தங்கம் வெல்வதே கிரிக்கெட் அணிகளின் பெரிய கனவாக இருக்கும்.

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் 2028 ஒலிம்பிக் தொடர் நடைபெற உள்ளது. இந்த தொடரில் எந்த புதிய விளையாட்டுக்களை சேர்க்கலாம் என்பது குறித்த ஆலோனைக் கூட்டம் மும்பையில் நடைபெற்றது.

சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி தலைவர் தாமஸ் பாக் தலைமையில் மும்பையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் டி20 கிரிக்கெட் போட்டியை ஒலிம்பிக் தொடரில் சேர்க்க முதற்கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டது.

கிரிக்கெட் விளையாட்டுடன், பேஸ்பால் / சாப்ட்பால், பிளாக் கால்பந்து (Flag football), ஸ்குவாஷ் மற்றும் லாக்ரோஸ் என மொத்தம் ஐந்து புதிய விளையாட்டுக்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

வரும் திங்கள் அன்று நடக்கும் ஓட்டுப் பதிவில் இந்த ஐந்து விளையாட்டுக்களையும் சேர்க்க உறுப்பினர்கள் தங்கள் தெரிவிக்க உள்ளனர். கிரிக்கெட் நிச்சயம் சேர்க்கப்படும் என கருதப்படுகிறது. ஏற்கனவே, இதற்காக அமெரிக்காவில் மூன்று கிரிக்கெட் மைதானங்கள் தயாராகி உள்ளன.

இதில் ஒலிம்பிக் அமைப்பு மற்றும் அதை நடத்தும் நாடுகளுக்கு பெரிய லாபம் உள்ளது. கிரிக்கெட் சேர்க்கப்பட்டால் எப்போதும் இல்லாத அளவுக்கு ரசிகர்கள் கூட்டம் ஒலிம்பிக்கில் கிரிக்கெட் போட்டிகளை காண கூடும். அது மற்ற விளையாட்டுக்களின் அளவை விட அதிகமாக இருக்கும்.

தற்போது ஐபிஎல் டி20 தொடர் தான் கிரிக்கெட்டின் மிகப் பெரிய தொடராக உள்ளது. அதன் வெற்றியே ஒலிம்பிக்கில் கிரிக்கெட்டை சேர்க்க அனைவரையும் தூண்டி இருக்கிறது. சமீபத்தில் ஆசிய விளையாட்டில் கிரிக்கெட் சேர்க்கப்பட்டது. அதில் இந்தியா மகளிர் பிரிவு மற்றும் ஆடவர் பிரிவில் இந்தியா இரண்டு தங்கப் பதக்கம் வென்றது. இனி இந்தியா ஒலிம்பிக்கில் கிரிக்கெட் விளையாட்டில் தங்கம் வெல்ல வேண்டும் என்பதே பெரிய லட்சியமாக இருக்கும். உலகக்கோப்பை இனி இரண்டாம் இடத்தில் தான் இருக்கப் போகிறது.

# இவரை டீமில் வைத்திருப்பதே வேஸ்ட்.. ரோஹித் நினைப்பது நடக்கவே நடக்காது.. ஆகாஷ் சோப்ரா கடும் விமர்சனம்



2023 உலகக்கோப்பை தொடரில் இந்திய அணியில் எல்லாமே சரியாக இருந்தாலும் ஆப்கானிஸ்தான் போட்டியில் ஆடிய ஷர்துல் தாக்குர் மீது மட்டும் விமர்சனத்தை முன்வைத்துள்ளார் முன்னாள் வீரர் ஆகாஷ் சோப்ரா.

ஷர்துல் தாக்குர் ஆல் ரவுண்டர் என்ற ஒரே ஒரு காரணத்தால் கேப்டன் ரோஹித் சர்மா அவரை அணியில் பிடிவாதமாக சேர்த்து ஆட வாய்ப்பு அளித்து வருகிறார்.

அவர் எட்டாம் வரிசையில் பேட்டிங் செய்வார், அதுஅணிக்குஇக்கட்டானநிலையில்பலனளிக்கும் என ரோஹித் சர்மா நம்புகிறார். ஆனால், ஷர்துல் தாக்குர் எப்போதுமே பேட்டிங் செய்யப் போவதில்லை. அவரால் அணிக்கு எந்த பயனும் இல்லை என சுட்டிக் காட்டி விளாசி இருக்கிறார் ஆகாஷ் சோப்ரா.

ஷர்துல் தாக்குர் அணியிலக் இடம் பெறக் காரணம், ஒரு பந்துவீச்சாளர் இடம் அணியில் சூழ்நிலைக்கு ஏற்ப மாறிக் கொண்டே இருப்பது தான்.

தற்போது இந்திய அணியில் பும்ரா, முகமது சிராஜ் என இரண்டு வேகப் பந்துவீச்சாளர்கள், ரவீந்திர ஜடேஜா, குல்தீப் யாதவ் என்ற இரண்டு சுழற் பந்துவீச்சாளர்கள் நிரந்தரமாக அணியில் இடம் பிடித்துள்ளனர்.

சுழற் பந்துவீச்சாளர் அஸ்வின், வேகப் பந்துவீச்சாளர் முகமது ஷமி, வேகப் பந்துவீச்சு ஆல் ரவுண்டர் ஷர்துல் தாக்குர் ஆகிய மூவருக்கு இடையே தான் ஒவ்வொரு போட்டியிலும் மாற்றம் இருக்கும்.

இந்த நிலையில், ஆஸ்திரேலியா போட்டியில் அஸ்வின் ஆடினார். அடுத்து நடந்த ஆப்கானிஸ்தான் போட்டியில் ஷர்துல் தாக்குர் ஆடினார். அப்போது முகமது ஷமி ஆடுவார் என பலரும் எதிர்பார்த்தனர். ஆனால், தாக்குர் எட்டாம் வரிசையில் பேட்டிங் ஆடும் திறன் கொண்டவர் என்ற அடிப்படையில் வாய்ப்பு பெற்றார்.

இது பற்றி ஆகாஷ் சோப்ரா கூறுகையில், "ஷர்துல் பேட்டிங்கில் ஒரு பந்துக்கு ஒரு ரன் எடுக்கும் ஒரு பந்து வீச்சாளர். அவர் 20 பந்துகளில் 45 ரன்கள் எடுக்க மாட்டார். அவர் அப்படிப்பட்ட வீரர் அல்ல. அவர் அப்படி விளையாடுவதில்லை. இப்போதைக்கு அணிக்கு தேவை 8வது வரிசையில் குறைந்த பட்சம் பேட்டிங் ஆடத் தெரிந்த ஒரு வீரர். அதனால்தான் ஷர்துல் இருக்கிறார், ஆனால் முகமது ஷமி அணியில் இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்" என்று கூறினார்.

"அணியில் ஷர்துல் தாக்கூர் முகமது ஷமி இருவரில் யார் விளையாட வேண்டும் என்பது பற்றி எப்போதும் விவாதம் உள்ளது. இந்திய அணி ஷர்துலை நோக்கி சென்று இருக்கிறது. என்னைப் பொறுத்தவரை ஷமி ஆட வேண்டும், ஆனால் அணி ஷர்துலை தான் ஆட வைக்கும், ஏனெனில், இந்திய அணி நிர்வாகம் அவரிடமிருந்து 8வது வரிசையில் பேட்டிங்கை எதிர்பார்க்கிறார்கள்" என ஆகாஷ் சோப்ரா கூறினார்.



மேலும், "நான் சொல்கிறேன். 8வது வரிசையில் ஷர்துல் எப்போதும் பேட்டிங் செய்யவே மாட்டார். வேறு யாராவது அந்த பெரிய ஷாட்களை ஆடி அணியை வெற்றி பெற வைக்க வேண்டும் அவர்கள் செய்யாவிட்டால், நாம் தோற்றுப் போவோம். எனவே, ஷர்துல் பேட்டிங் ஆட வரப் போவதில்லை. வந்தாலும் அதில் பயனில்லை. பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா ஷமியுடன் விளையாட வேண்டும் என்று நான் நினைக்கிறேன்" என்று கூறி முடித்தார் ஆகாஷ் சோப்ரா

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.